281—

மண்ணச்சநல்லூரில் சார்நிலைக் கருவூலம் அமைத்தல்

*35642—**திரு. எம். தங்கவேல்:**

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முசிறி தொகுதி, மண்ணச்சநல்லூரில் ஒரு சார்நிலைக் கருவூலம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், நிதி அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): திருச்சி மாவட்டம், மண்ணச்சநல்லூரில் புதிய சார்நிலைக் கருவூலம் துவக்குவது குறித்த செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

286—

புலியனூரில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

*38104—**திரு. சா. பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திண்டிவனம் வட்டம், புலியனூர் கிராமத்திற்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துக் கொடுக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

திண்டிவனம் வட்டம், புலியனூர் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் ஏதும் இல்லை.

TRUTH ALONE TRIUMPHS